
# திருவள்ளுவர்




சிவகாமி பப்ளிஷிங் ஹௌஸ்
ஸ்ரீவைகுண்டம்

ரெஜிஸ்தர் செய்தது] [விலை அணா 4.

1932

# திருவள்ளுவர்

(Approved by the Text-Book Committee, Madras.
*Vide Fort St. George Gazette, Part I-B, Page 630,*
*Dated 15th November, 1932* )

சிவகாமி பப்ளிஷிங் ஹௌஸ்
ஸ்ரீவைகுண்டம்

ரெஜிஸ்தர் செய்தது] [விலை அணா 4

# பொருள் அடக்கம்


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | ஆதியும் பகவனும்—வள்ளுவர் பிறப்பும் | 5 |
| 2. | கல்விப் பயிற்சியும் தொழில் முயற்சியும் | 9 |
| 3. | திருவள்ளுவர் ஆடை நெய்வது | 13 |
| 4. | ஏலேல சிங்கன் | 14 |
| 5. | வாசுகி அம்மை | 21 |
| 6. | திருவள்ளுவரும் சங்கப்பலகையும் | 25 |
| 7. | திருவள்ளுவர் வாசவனுக்கு உபதேசித்தது | 29 |
| 8. | ஏலேல சிங்கனும் பண்டிதர்களும் | 32 |
| 9. | திருக்குறள் - வித்துவான்-பிறப்பினால் பெருமை இல்லை | 36 |

# முன்னுரை

தமிழ் நாடு நமது தாய் நாடு. இது நமது பெரியோர்கள் வாழ்ந்த தேசம். நமது தாய் நாட்டில் வாழ்ந்த பெரியோர்களில் திருவள்ளுவர் ஒருவர்.

திருவள்ளுவர் 'திருக்குறள்' என்னும் நீதி நூலைச் செய்து நமக்குத் தந்திருக்கிறார். இந்நூலை அறிஞர் அனைவரும் புகழ்ந்து படிக்கிறார்கள். தக்க வயதும் அறிவும் அடைந்த எவரும் இந்நூலை நன்றாகக் கற்கலாம். கற்று இதன் அருமை பெருமைகளை நன்றாக உணர்ந்துகொள்ளலாம். திருவள்ளுவர் செய்த திருக்குறளினால், நமது தாய் மொழியான தமிழ் மொழிக்கே விசேஷமான பெருமை ஏற்பட்டிருக்கிறது.

தமிழ் மொழி உயர்வு எய்தற்குக் காரணமாயிருந்த புலவர் இருவருள் ஒருவர் திருவள்ளுவர்; மற்றவர் கம்பர்.

திருவள்ளுவர் தமிழர்; தமிழ்மொழியிலே திருக்குறளை இயற்றினார்; தமிழ் நாட்டிலே வாழ்ந்தார். இது தமிழ் நாட்டின் உண்மையான பெருமைகளில் ஒன்றாகும். நமது நன்மைக்காக மட்டும் திருவள்ளுவர் தோன்றினாரென்பது உண்மையன்று. உலக நன்மைக்காகவே திருவள்ளுவர் தோன்றித் திகழ்ந்தார். இதனாலன்றோ, பாரதியார்

"வள்ளுவன் றன்னை உலகினுக்கே தந்து,
வான்புகழ்கொண்ட தமிழ்நாடு"

என்று பாடியுள்ளார்.

திருவள்ளுவர் திருக்குறளைச்செய்தது, உலகத்திற்கே செய்த உபகாரம். திருக்குறள் என்னும் நீதி நூல் உலக மக்களுக்கு ஒரு வழிகாட்டியாக அமைந்துள்ளது. எனவே, திருவள்ளுவர் உலகம் போற்றும் உபகாரி. செந்தமிழ்ப் பெரியோராகிய இவர், உலகப் பெரியோர்களினும் ஒருவரென்பதில் ஐயமில்லை.

இத்தகைய பெருமைவாய்ந்த திருவள்ளுவரைக் குறித்தும், அவரது திருக்குறளைக்குறித்தும் பல அழகிய கற்பனைக்கதைகள் நமது நாட்டிலே வழங்கி வருகின்றன. இக்கதைகளில் சில, இச்சிறு புத்தகத்தில் அடங்கியுள்ளன. இவை சிறுவர்களுக்கு ஏற்ற எளிய தமிழ் நடையில் இனிமையாக எழுதப்பெற்றுள்ளன.

நூலாசிரியர்.

# வள்ளுவர் கதை

## 1. ஆதியும் பகவனும் - வள்ளுவர் பிறப்பும்.

முன்னொரு காலத்தில் சோழ தேசத்திலே, பகவன் என்னும் பிராமணன் ஒருவன் இருந்தான். அவன் நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவன்; கல்வியில் சிறந்தவன்; ஒழுக்கத்தில் உயர்ந்தவன்; நாலு வேதங்களையும் நன்றாக அறிந்தவன்.

அறிவிலும் ஒழுக்கத்திலும் சிறந்திருந்ததுபோல் அவன் அழகிலும் சிறந்து விளங்கினான். அவன் சாஸ்திரங்களையெல்லாம் கற்று அறிந்ததோடு, தேச சஞ்சாரம் செய்து உலகத்தையும் அறிந்துகொள்ள விரும்பினான். இந்நோக்கத்தோடு, பகவன் முதல் முதல் காசியாத்திரை செய்யவேண்டுமென்று தீர்மானித்தான்.

பிறகு அவன் தன் ஊரைவிட்டுப் புறப்பட்டான். வழியிலே உள்ள கருவூர் என்னும் ஊரில் தங்கினான். அவ்வூரில் ஆதி

என்னும புலச்சி ஒருத்தி இருந்தாள். அப் பெண் விவாகமாகாத கன்னிகை; அழகிலே சிறந்தவள். அழகைப்போல், அவளிடம் அறிவும் சிறந்து இருந்தது. அறிவைப் போல் அவளிடம் அடக்கம் பணிவு முத லிய நற்குணங்களும் சிறந்து விளங்கின. பகவன் தெய்வச்செயலாக அப்பெண்ணை சந்தித்தான். அவனும் விவாகமாகாத பிரமசாரியாக இருந்தான். ஆதி, பகவன் என்னும் இருவருக்கு மிடையே சிநேகம் ஏற்பட்டது.

ஆதி தன் குலம் இன்னதென்று பணி வாகத் தெரிவித்துக்கொண்டாள். எனினும் பகவன் சாதிக்கட்டை மீறி அவளை மணம் செய்து கொண்டான். அது தகாத செய் கையென்று பிராமணர்கள் நினைத்தார்கள். எனவே அவர்கள் கோபம் கொண்டு ஆதி யையும் பகவனையும் இகழ்ந்து பேசினார்கள். மனவருத்தம் கொண்ட பகவன், ஆதி யைக் கைவிட்டுப் போகலாம் என்று கருதினான். ஆனால் ஆதி அன்போடு தன் கணவனைத்தொடர்ந்து சென்றாள்.

பகவன், ஆதியை நோக்கி, "பெண்ணே, நீ ஏன் என்னைத் தொடர்ந்து வருகிறாய்?" என்று கேட்டான். அதற்கு அவள் 'உம் மைப் பிரிந்த பின், எனக்கு வாழ்வு இல்லை'

என்று மறுமொழி சொன்னாள். பகவன் ஆதியின் மெய்யன்பை அறிந்து ஆச்சரியம் அடைந்தான்.

பிறகு பகவன் தன் மனைவியை நோக்கி 'நான் தேச சஞ்சாரம் செய்யப்போகிறேன். நீ என்னுடன் வரவேண்டுமென்று சொல்லுகிறாய்: அப்படியானால் நான் சொல்லும் நிபந்தனையை நீ ஒப்புக்கொள்ள வேண்டும். அதாவது நீ குழந்தைகள் பெற்றால் அக் குழந்தைகளைப் பெற்றெடுக்கும் தலங்களிலேயே விட்டு வரவேண்டும். குழந்தைகளை கடவுள் காப்பாற்றுவாரென்று நம்பி ஒழுகுதல் வேண்டும். இந் நிபந்தனையை ஒப்புக் கொண்டால், நீ என்னுடன் வரலாம் நானும் உன்னை அழைத்துப் போவேன்' என்று சொன்னான். ஆதி, கணவன் மீது அளவு கடந்த அன்புள்ளவள். ஆதலால் கணவன் சொன்ன நிபந்தனையை ஒப்புக் கொண்டாள். உடனே இருவரும் பிரயாணமாகிப் பலவேறு தலங்களுக்குச் சென்றனர்.

அவ்வாறு ஆதியும் பகவனும் தேச சஞ்சாரம் செய்து வருகையில், அவர்களுக்கு ஏழு குழந்தைகள் பிறந்தன. அக் குழந்தைகளில் ஆண் குழந்தைகள் மூன்று, பெண் குழந்தைகள் நான்கு. பெண்

குழந்தைகளில் ஔவையாரும் ஒருவர். இவர் பிற்காலத்தில் கவி பாடுவதில் சிறந்த பெண்மணியாக விளங்கினார்.

புதல்வர் மூவருள், நமது வள்ளுவரும் ஒருவர். இவர் பிற்காலத்தில் திருவள்ளுவர் எனப்பெயரும் புகழும் பெற்று வாழ்ந்தார். வேறு புதல்வர் இருவருள் கபிலர் ஒருவர் ; அதிகமான் மற்றவர்.

இக் குழந்தைகளை விட்டுப் பிரிவது, பெற்றோருக்குக் கஷ்டமாகவே இருந்தது. எனினும் தாங்கள் ஏற்படுத்திக்கொண்ட நிபந்தனையை மீறுவது தவருகும் என்று அவர்கள் நினைத்தார்கள்.

பச்சிளங்குழந்தைகளின் பிரிவு தாயாருக்கு எவ்வளவு மனக்கவலையைக் கொடுத்திருக்கவேண்டும்! எனினும் அவள் அதை கடவுளின் சோதனையாகவே கருதினாள். தாய் வருந்துவதைக் கண்ட குழந்தைகளும் அவளுக்கு ஆறுதல் கூறினவாம். இதனால் தாயும் ஒருவாறு தைரியம் அடைந்து, குழந்தைகளைப் பிறந்த இடங்களிலேயே விட்டுப் பிரிந்தனள்.

இவ்வாறு பெற்றோர் அங்கே விட்டு வைத்த குழந்தைகளைத் தக்க மனிதர்கள் கண்டெடுத்தனர். கடவுளருளால் கிடைத்த அக் குழந்தைகளை அம்மனிதர்கள், தாம்தாம்

பெற்றெடுத்த பிள்ளைகளாகவே மதித்தார்கள். பிள்ளைகளும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து, அறிவிலும் புகழிலும் சிறந்து விளங்கினர்.

இப் பிள்ளைகளில் ஒருவரான வள்ளுவர் திருமயிலை என்னும் தலத்திலே பிறந்தார். திருமயிலையை இந்நாளில் மயிலாப்பூர் என்று சொல்லுகிறோம். இத்தலம் இப்பொழுது நமது இராஜதானியாகிய சென்னைப்பட்டணத்தின் பகுதியாக அமைந்திருக்கிறது.

---

## 2. கல்விப் பயிற்சியும், தொழில் முயற்சியும்

மயிலாப்பூரில் குழந்தை பிறந்தவுடன், அக்குழந்தையை அவ்விடத்திலேயே விட்டுப் பிரியவேண்டுமென்று பகவன் தன் மனைவிக்கு ஞாபகப்படுத்தினான். குழந்தையோ பூர்ண லட்சணத்தோடு விளங்கியது. தாய் குழந்தையின் முகத்தை உற்று நோக்கினாள். 'ஆ! ஆ! என்ன அழகு! என்ன ஒளி!' என்று அதிசயித்தாள். இக்குழந்தையை எவ்வாறு பிரிவது? என்று ஏங்கினாள்.

பகவனும் குழந்தையின் அழகைக் கண்டு ஆச்சரியம் அடைந்தான். அவனுக்கும் அக்குழந்தையைப் பிரிந்து செல்வது பெருங்கஷ்டமாகவே யிருந்தது, எனினும்

தான் தன் மனைவிக்குக்கூறிய நிபந்தனையின் படி நடக்கவேண்டியது அவசியம் என்று எண்ணினன். தாயோ குழந்தையை நோக்கிக்கொண்டே, விம்மி விம்மி அழுதாள்.

அப்பொழுது அக்குழந்தை தாய்முகம் நோக்கி, 'கடவுள் உயிர்களையெல்லாம் காப்பாற்றி வருகிருர். அது அவர் பாரம். கடவுள் காப்பாற்றும் உயிர்களில் நானும் ஒருவன் என்பது பொய்யா? என்னைக்காப்பாற்றும் பாரமும் கடவுளைச் சார்ந்ததல்லவா? ஆதலால், அம்மா, நீ கலங்க வேண்டாம்' என்று ஆச்சரியமாக வாய்திறந்து பேசியது. பிறகு பெற்ரேர் தைரியம் அடைந்து, குழந்தையைப்பிரிந்து சென்றனர்.

பறையர்களின் குலகுருவாகிய வள்ளுவன் ஒருவன் அக்குழந்தையைக் கண்டெடுத்து வளர்த்தான்; அவ்வள்ளுவன் அரசனுடைய உத்தரவுகளை யானைமேல் முரசு அறைந்து ஜனங்களுக்கு அறிவிக்கும் உத்தியோகத்தை வகித்து வந்தான். வள்ளுவன் வளர்த்ததால், குழந்தைக்கு 'வள்ளுவர்' என்னும் பெயர் பின்னளில் பிரசித்தமாயிற்று. குழந்தைக்கு வள்ளுவன் இட்ட இயற்பெயரை நாம் இப்பொழுது அறியோம்.


வள்ளுவன் வீட்டில் வளர்ந்த வள்ளுவர் தமது வளர்ப்புத் தகப்பனோடு இராஜ சபைக்குப் போவதுண்டு. அங்கே அவர், இளமையிலேயே பல வித்துவான்களோடு பழகி வந்தார். இளமைப் பருவத்தினரான வள்ளுவரின் அறிவும் அழகும் வளர்பிறைச் சந்திரனைப்போல் வளர்ந்து வந்தன.

இராஜ குமாரர்களோடும் பல வேறு நல்லறிஞர்களோடும் இளமையிலேயே பழகிவந்த வள்ளுவர், தக்க வயதில் ஒரு நல்லாசிரியரை அடைந்து கல்வி கற்றார். அவர் அக்காலத்தில் தமிழிலும், சமஸ்கிருதத்திலும் உள்ள நூல்களை யெல்லாம் கற்றுணர்ந்தார். கல்வி யறிவைப்போல, நல்லொழுக்கமும் வள்ளுவரிடம் வளர்ந்தோங்கலாயிற்று. அவர் தெய்வப்புலவர் என்றும் திருவள்ளுவர் என்றும் பெயர் பெற்றார்.

அந்நாளில் ஒருவரும் நமது திருவள்ளுவரைத் தாழ்குலத்தவரென்று ஒதுக்கத் துணியவில்லை. உயர் குலத்தவர்கள் என்று கருதப்பெற்றவர்களும் அவரை ஓர் உயர்கவிப் புலவராகவே மதித்துப் போற்றினர். எனவே அவர் பல வேறு வகுப்பினரான ஜனங்களோடும் கலந்து பழகினர்.

திருவள்ளுவர் கல்வியை விரும்பியது போல் தொழில் முயற்சிகளையும் விரும்பிப் போற்றினர். கல்வி, மக்களுக்கு அவசிய மாவதுபோல், தொழில் முறைகளும் அவசியமாகும். அறிவு வளர்ப்பதற்குக் கல்வி வேண்டும்; வயிறு வளர்ப்பதற்குத் தொழில்வேண்டும்; அறிவாளிகளைப்போல் தொழிலாளிகளும் நமது உபகாரிகளே யாவர். அறிவாளி நமக்கு அறிவு தருகிருன். உழவன் உழுது நமக்கு உணவு தருகிருன். சேணியன் நமக்குத் துணி நெய்து தருகிருன். கொத்தன் வீடுகட்டித் தருகிருன். இப்படியே பல வேறு தொழிலாளிகளும் தங்கள் தொழில் முயற்சிகளால் நமக்கு உதவி செய்கிருர்கள். எனவே, நாமும் ஏதாவது ஒரு தொழில் செய்து பிறருக்கு உதவி செய்யவேண்டும் என திருவள்ளுவர் யோசித்தார்.

பிறகு அவர் எத்தொழிலைச் செய்யலாம் என்று ஆலோசித்துப் பார்த்தார். நமது நாட்டின் நிலைமையை நோக்குவோர் 'சீரைத்தேடின், ஏரைத்தேடு' என்றபடி பயிர்த்தொழிலின் சிறப்பை உடனே ஒப்புக் கொள்வர். பயிர்த்தொழிலுக்கு அடுத்தபடியாகச் சிறந்து விளங்கும் தொழில், நெசவு என்பதையும் அவர்கள் ஒப்புக்கொள்வார்



கள். திருவள்ளுவரும் இவ்விதமாகவே நினைத்தார். உழவு, நெசவு என்னும் இரண்டு முக்கியமான தொழில்களில் அவர் நெசவைத் தமது தொழில் முயற்சியாகக் கொண்டார்.

திருவள்ளுவர், வஞ்சமற்ற தொழில்களில் ஒன்றைச் செய்ய விரும்பினார். அப்படிப்பட்ட தொழில்களில்,

“செய்யும் தொழில்களையே சீர்தூக்கிப் பார்த்தக்கால்
நெய்யும் தொழிற்கு நிகரில்லை”

என்றபடி, தமக்கு ஏற்றது நெசவேயென்று அவர் துணிந்தார்.

---

## 3. திருவள்ளுவர் ஆடை நெய்வது.

இடக்கையில் சுத்தம் செய்த வெண்மையான பஞ்சை வைத்துக் கொண்டு, வலக்கையால் சக்கரம் சுற்றி நூல் நூற்பதில் திருவள்ளுவருக்கு விருப்பம் அதிகம். நூற்ற நூலைத் தறியில் இட்டுத் துணி நெய்வதிலும் அவருக்கு விசேஷ விருப்பமுண்டு.

அந்நாளில் புலவர்களும கவிராயர்களும் அரசர்களையும் பிரபுக்களையும் பாடிப்

புகழ்வார்கள். அவர்களிடம் பொருள் வேண்டும் என்று கேட்பார்கள். அரசர்களும் பிரபுக்களும் தங்களைப் புகழ்ந்து பாடும் புலவர்களுக்குப் பொருள் கொடுப்பார்கள். அப் புலவர்களுக்கு உழவு தெரியாது; நெசவு தெரியாது; வேறு தொழில்களும் தெரியா. புலவர்கள் தொழில் முயற்சிகளில் பழகிக் கொள்ளாததால் பிறரைப் புகழ்ந்து யாசகம் வாங்கிப் பிழைத்தார்கள். இது இழிவானதென்று, திருவள்ளுவர் நினைத்தார். அவர் நெசவுத் தொழில் செய்து வந்ததால் அதில் கிடைக்கும் பொருளைக் கொண்டு கௌரவமாகக் காலம் கழித்தார். அரசர்களையும் பிரபுக்களையும் தேடியடைந்து, அவர்களிடம் பொருள் பெற்று வாழவேண்டிய அவசியம் அவருக்கு ஏற்படவில்லை.

---

## 4. ஏலேல சிங்கன்

சில சமயங்களில், திருவள்ளுவர் ஓர் வியாபாரியிடம் நூல் வாங்கி நெசவு தொழில் செய்வதுமுண்டு. இவ் வியாபாரிக்கு ஏலேல சிங்கன் என்பது பெயர் ஏலேல சிங்கன் ஒரு கப்பல் வியாபாரி. அவனுக்குப் பல கப்பல்கள் உண்டு.

பிள்ளைகளே, நீங்கள் கப்பல் பார்த்திருக்கிறீர்களா? கப்பல் ஸமுத்திரத்திலே மிதக்கும் அல்லவா? கப்பல் இல்லாவிட்டால் கடல் யாத்திரை செய்வது இயலாத காரியம். வண்டி நிலத்தில் ஓடும். ஒரு நாட்டில் இருந்து அந்நிய நாடுகளுக்குக் கடலின் வழியாகப் பலவகையான சாமான்களை ஏற்றிச் செல்வது எது? கப்பல் அல்லவா? கப்பல்களால் கடல் வழியாகச் செய்யும் வியாபாரத்தையே கப்பல் வியாபாரம் என்று சொல்லுகிறோம். இவ்வியாபாரம் செய்பவன் கப்பல் வியாபாரி. இவர்கள் 'திரை கடல் ஓடியும் திரவியம் தேடு' என்னும் கொள்கையுடையவர்களாய் பழைய காலத்தில் நமது நாட்டிலே வர்த்தக ராஜாக்களாக விளங்கினார்கள். இவ்வர்த்தக ராஜாக்களில் ஒருவன் ஏலேல சிங்கன்.

பிள்ளைகளே, இந்நாளில் புகை வண்டிகளைப்போல், கடலிலே வேகமாக ஓடும் பெரிய புகைக் கப்பல்களைப் பார்க்கிறோம். முற்காலத்திலுள்ள கப்பல்கள் இப்படிப்பட்ட பெரிய கப்பல்கள் அல்ல. அக்கப்பல்கள் தற்காலத்திலுள்ள படகுகளுக்குச் சமானமாகவே யிருக்கும். அவை தற்காலத்திலுள்ள புகைக் கப்பல்களைப்போல் நீராவியின் சக்தியால் ஓடுவன அல்ல.

அவை காற்றை நம்பிச் செல்லும் பாய்மரக் கப்பல்கள். இக்கப்பல்களைக் கொண்டு கடல் கடந்து வெளிநாடுகளில் வியாபாரம் செய்து பொருள் தேடி வருவதற்கு, எவ்வளவு தைரியம் வேண்டும்! இவ்வாறு வியாபாரம் செய்துவந்த வர்த்தக ராஜாவான ஏலேல சிங்கன் நாளடைவில் திருவள்ளுவருக்குத் தோழனுகவும் சீஷனுகவும் அமைந்தான்.

ஒரு சமயம் ஏலேல சிங்கனுடைய கப்பல் தரையில் மோதிவிட்டது. அப்பொழுது அவ்வர்த்தக ராஜாவின் வேலைக்காரர்களும் வேறு ஜனங்களும் கப்பலை இழுத்துக் கரைசேர்க்க முயன்றனர். ஜனங்களின் கூட்டத்தில் திருவள்ளுவரும் காணப்பெற்ருர். அவர் 'ஏலேயா! ஏலேயா! என்று கூவிக்கொண்டே ஜனங்களை உற்சாகப்படுத்தினர். அவ்வாறு உறசாகப்படுத்திக்கொண்டே, அவரும் தம் அருமைக்கைகளால் கயிற்றைப்பிடித்துக் கப்பலை இழுக்க முயன்ருர்.

இதைக்கண்ட ஜனங்கள் விசேஷ உற்சாகத்தோடு 'ஏலேயா!' என்று ஒரே குரலில் கூவிக்கொண்டு, கப்பலைக் கரைசேர்த்துவிட்டார்கள். நம் தமிழ் நாட்டில் படகு ஓட்டுபவரும் வேறு தொழிலாளிகளும்,

கஷ்டமான வேலை செய்கையில் சிரமம் தெரியாமல் இருப்பதற்காக ' 'ஏலையா! ஏலையா!' என்று கூவிப்பாடுவது இன்றும் வழக்கமாக இருந்துவருகிறது. ஏலேல சிங்கன் என்னும் பெயரைச்சுருக்கி, 'ஏலையா' என்று சாமானிய ஜனங்கள் அழைப்பதுண்டு. இது அவர்கள் ஏலேல சிங்கனுக்குக் கொடுத்திருந்த அருமையான செல்வப் பெயராகும்.

ஏலேல சிங்கன் வியாபாரத்தில் எப்பொழுதும் ஒழுங்காகவே நடந்துகொள்வது வழக்கம். இதனால் அவனுக்குக் கடவுள் அருள் செய்தார் என்றும், ஒரு பொழுதும் அவன் செல்வத்திற்குக் குறைவு இல்லையென்றும் ஜனங்கள் நம்பினார்கள். இக்காரணம் பற்றியே,

'ஏலேல சிங்கன் பொருள்
தானே போய்த் தானே வரும்'

என்னும் பழமொழி ஏற்பட்டது.

ஒரு சமயத்தில், ஏலேல சிங்கன், அதிகமான தானியங்களைச் சேர்த்துவைத்திருந்தான். வெளி நாடுகளுக்கு அத்தானியங்களைக் கொண்டுபோய், அங்கே நல்ல விலைக்கு விற்கவேண்டுமென்று அவன் எண்ணினான். அப்பொழுது நம் தமிழ்

நாட்டில் கால மழை பொழியாமல், விளைவு மிகவும் குறைந்துபோயிற்று. இதனால் பஞ்சம் பரவத்தொடங்கியது. ஜனங்கள் பசியால் வருந்திப் புலம்பினார்கள்.

நெல்விலை உயர்ந்தது; பொன்விலை தாழ்ந்தது. செல்வர்களும் ஏழைகளைப் போல் கஷ்டப்பட்டார்கள். பெற்றோர் குழந்தைகளைக் கைவிட்டார்கள். மக்கள் தாய் தந்தையரைக் கைவிட்டார். புருஷன் மனைவியைக் கைவிட்டான். மனைவி புருஷனைக் கைவிட்டாள். ஜனங்கள் மானத்தை இழந்தார்கள்; மதியை இழந்தார்கள்; குலத்தை மறந்தார்கள்; கல்வியை மறந்தார்கள்; தானமும் தவமும் மறைந்தன; பக்தியும் சிரத்தையும் பறந்து போயின. நோயும் மரணமும் அதிகரித்தன.

இந்நிலைமையில், திருவள்ளுவர் தமது சிநேகிதனும் சிஷ்யனுமான ஏலேல சிங்கனை அழைத்து, அவனை நோக்கி, 'ஏலையா, நாம் இப்பொழுது ஜனங்களைக் காப்பாற்றவேண்டும்' என்று சொன்னார்.

'சுவாமி, அதற்கு அடியேன் செய்ய வேண்டியது என்ன?' என்று ஏலேல சிங்கன் மரியாதையாகக் கேட்டான். அப்பொழுது அவர், 'இந்தப் பஞ்சம் நீங்கும் வரை, நீ ஏழைகளுக்குத் தாராளமாகத்

தானியங்களை வழங்குதல் வேண்டும். செல்வர்களுக்கும் தானியங்களை வேண்டிய அளவு லாபமாகவே விற்கவேண்டும். நீ சுயலாபம் அடையும் எண்ணத்தை இப்பொழுது விட்டுவிடவேண்டும்' என்று கூறினார்.

ஏலேல சிங்கனும் தன் குருநாதரான திருவள்ளுவர் சொன்னபடியே செய்தான். ஆயிரக்கணக்கான ஏழை ஜனங்கள் இரவும் பகலும் உதவிபெற்றார்கள். பணக்காரர்களும் செழிப்பான காலத்தில் பெறுவது போல் தானியங்களை லாபமான விலைக்குப் பெற்று மகிழ்ந்தார்கள்.

பஞ்சகாலத்தில் ஏலேல சிங்கன் செய்த உதவியை ஜனங்கள் மறக்கவே யில்லை. அவர்கள் திருவள்ளுவரையும், தங்கள் 'ஏலையா'வையும் வாயார வாழ்த்தினார்கள். இனி விற்பனையில் கொள்வன வெல்லாம் ஏலேல சிங்கனிடத்தே கொள்ள வேண்டுமென்று செல்வர்களும் ஏழைகளும் ஒரே மனமாகத் தீர்மானம் செய்து கொண்டார்கள்.

அப்பால் மழை பெய்தது. பஞ்சம் நீங்கிப்போயிற்று. நாடு செழித்தது. ஜனங்கள் க்ஷேமம் அடைந்தார்கள். நெல் முதலிய தானியங்கள் மலிந்தன. பொன் விலை

ஏற, நெல் விலை வழக்கம்போல் இறங்கிவிட்டது. ஏலேல சிங்கன் முன்பு செல்வர்களுக்குத் தானியம் விற்றுச் சேர்த்திருந்த பொற்காசுகளுக்கு இப்பொழுது மதிப்பு அதிகமாயிற்று. மேலும் பொது ஜனங்களின் ஆதரவினால், ஏலேல சிங்கனுடைய உள்நாட்டு வர்த்தகமும் வளர்ந்தோங்கியது.

இவ்வாறு தான் பெற்ற செல்வச் சிறப்பை ஏலேல சிங்கன் தன் ஆசிரியரான திருவள்ளுவரிடம் தெரிவித்தான். அவரும் முகமலர்ந்து, 'இறைத்த கிணறு ஊறும்' என்று அருளிச்செய்தார். வர்த்தக ராஜாவான ஏலேல சிங்கன் அவ் வாக்கியத்தை நன்றாக ஆராய்ந்து பார்த்தான்.

'ஆம், ஆம், குருநாதர் கூறியது உண்மையே. கிணற்றில் ஊறிக்கொண்டிருக்கும் நீரை அடிக்கடி இறைத்தல் வேண்டும். அப்பொழுதுதான் கிணறு சுத்தம் ஆகிறது; நீரும் அதிகமாக ஊறுகிறது. இறைக்கப் பெறாத கிணறு பாழாகும் அல்லவா? அப்படியே பொருள் தேடுவோர் பொருளை நல்வழியில் செலவு செய்தல் வேண்டும். அப்பொழுதுதான், அப்பொருள் பயன்படும், அபிவிர்த்தியும் அடையும்' என்று ஏலேல சிங்கன் தனக்குள் தானே சொல்லிக் கொண்டான்.

## 5. வாசுகி அம்மை

காவிரிப்பூம்பட்டினத்தில் மார்க்க சகாயன் என்னும் வேளாளன் ஒருவன் இருந்தான். அவன் திருவள்ளுவர் காலத்தில் பெரிய பிரபுக்களில் ஒருவனுகக் கருதப் பெற்ருன். ஏலேல சிங்கன் வர்த்தக ராஜா ஆயினுற்போல, மார்க்கசகாயன் விவசாய ராஜா ஆயினுன். இவன் ஆயிரக் கணக்கான ஏர்கள் வைத்து விவசாயம் செய்து வந்தான். வியாபாரத்தில் ஏலேல சிங்கன் திறமை வாய்ந்திருந்ததுபோல், மார்க்கசகாயன் பயிர்த்தொழிலில் திறமை வாய்ந்திருந்தான்.

மார்க்கசகாயனுடைய தோட்டம் ஒன்றில் துஷ்ட சுபாவமுள்ள ஒரு பூதம் இருந்ததாக ஜனங்கள் நம்பினுர்கள். அதனுல் அத்தோட்டம் பாழாகிவிட்டதாகவும் அவர்கள் கருதினுர்கள். காவிரிப்பூம்பட்டினத்திற்குச் சென்றிருந்த திருவள்ளுவர் இதைக் கேள்வியுற்ருர். திருவள்ளுவரின் பெருமையைக் கேள்விப்பட்டிருந்த மார்க்க சகாயனும் அவரை நேரில் தரிசனம் செய்து, பூதத்தை விலக்க வேண்டுமென்று பிரார்த்தித்தான். பேய்களும் பூதங்களும் மூடர்களேயே பயப்படுத்துகின்றன என்று திருவள்ளுவர் கூறினுர். பிறகு அவர் மூட

நம்பிக்கைகளை ஒழித்து ஞானம் அடையும் வழியை மார்க்கசகாயனுக்கு உபதேசித்தார். நாளடைவில் காவிரிப்பூம்பட்டினத்தில் ஞானம் பரவியதால், பேய் பிசாசுகளைப் பற்றிய பயமும் ஒழிந்தது.

திருவள்ளுவருடைய ஞானத்தையும் லட்சணத்தையும் கண்டு மார்க்கசகாயன் ஆச்சரியம் அடைந்தான். பிறகு அவன், அவருக்குத் தன் அருமைக் குமரியான வாசுகியம்மையை மணம் செய்து கொடுத்தான்.

வாசுகி யம்மை திருவள்ளுவருக்குத் தக்க தேவியா யிருந்தாள். அவள் அழகிலும் அறிவிலும் குணத்திலும் ஒப்பற்று விளங்கினாள். அவள் எப்பொழுதும் தன் நாயகருக்கு ஏற்றபடி நடந்து வந்தாள்.

திருவள்ளுவர் வாசுகியம்மையோடு மயிலாப்பூருக்குத் திரும்பி வந்தார். அங்கே புருஷனும் மனைவியும் ஒருமனமாக இல்லறம் நடத்திவந்தார்கள். வாசுகியம்மை திருவள்ளுவரோடு பல நூல்களையும் ஆராய்ந்தாள். இவ்வாறு அவள் தன் அறிவை வளர்த்ததோடு நெசவுத் தொழிலிலும், தன் கணவருக்கு உதவிசெய்தாள். மேலும் அம்மை வீட்டுக்காரியங்களையும் நன்றாகக் கவனித்து வந்தாள்.

இவ்வாறு திருவள்ளுவரும் வாசுகியும், இல்லறம் நடத்தி வருகையில் திருவள்ளுவருடைய சீஷர்களில் சிலர் அவர் வீட்டிற்கு வந்தார்கள். திருவள்ளுவர் அவர்கள் வந்த காரியம் என்ன என்பதைக் குறித்து விசாரித்தார். அப்பொழுது அவர்கள் திருவள்ளுவரை நோக்கி, 'இல்லறம் பெரிதோ? துறவறம் பெரிதோ?'—அதாவது 'ஒருவன் விவாகம் செய்துகொண்டு வாழ்வது நன்ரு? அல்லது விவாகமில்லாமல் துறவியாய் வாழ்வது நன்ரு ?'—என்று கேட்டார்கள். அக் கேள்விக்குத் திருவள்ளுவர் பதில் சொல்லாமல் மௌனமாயிருந்தார். தமது வீட்டில் நடக்கும் நிகழ்ச்சிகளைக் கொண்டு அவர்கள் தாமாகவே அறிந்துகொள்ள வேண்டுமென்று அவர் நினைத்தார்.

திருவள்ளுவரும் அவரது மனைவியும் எவ்வாறு நடந்துகொள்ளுகிருர்களென்பதை அச் சீஷர்கள் கவனித்தார்கள். திருவள்ளுவர் விரும்பியபடி, சிலநாள் அவ்வீட்டிலேயே தங்கினுர்கள். முடிவில் அவர்கள், தகுந்த மனைவியோடு வாழ்வோருக்கு இல்லறமே பெரிதென்று துணிந்தார்கள்.

ஆனல் திருவள்ளுவரின் இல்லற வாழ்க்கை நீடித்திருக்கவில்லை. சிறிது

காலம் தன் கணவரோடு சிறப்பாக வாழ்ந்த பின், வாசுகியம்மை மரணம் அடைந்தாள்.

கற்பிற்சிறந்த தமது தேவியை இழந்து திருவள்ளுவர் துக்கத்தில் மூழ்கினார். எனினும் ஞானியானதால் ஒருவாறு மனம் தேறினார்.

வாசுகியம்மையின் பெருமையைக் குறித்து, எத்தனையோ கதைகள் முளைத்திருக்கின்றன! ஒருநாள் பட்டப்பகலிலே திருவள்ளுவர் கையிலிருந்து ஒரு சாமான் தவறிக் கீழேவிழுந்தது. அவர் அதை எடுப்பதற்கு விளக்கு வேண்டுமென்று சொன்னார். உடனே வாசுகியம்மை மௌனமாக விளக்கை ஏற்றிக்கொண்டு வந்தாள்! ஒருநாள் பழைய சாதம் சுடுகிறதென்று திருவள்ளுவர் கூறினார்! வாசுகியம்மை விசிறி கொண்டு விசிறினாள்! மற்றொருநாள், வாசுகி கிணற்றிலே தண்ணீர் இறைத்தாள். அப்பொழுது திருவள்ளுவர் தேவியை அவசரமாகக் கூப்பிட்டார். கிணற்றிலே பாதி வரை இழுத்துக்கொண்டிருந்த நீர் நிறைந்த பாத்திரத்தை அப்படியே விட்டுவிட்டு, வாசுகியம்மை ஓடிவந்தாள்! எனக் கதைகள் பல, வாசுகியின் பெரும் புகழை வெளியிடுகின்றன.

---

## 6. திருவள்ளுவரும் சங்கப் பலகையும்

மனைவி காலம் சென்றபின், திருவள்ளுவர் தமது சீஷர்களுக்கு உபதேசம் செய்வதையே பொழுது போக்காகக் கொண்டார். அவர் அவர்களுக்கு விசேஷமாக நீதியையும் தர்மங்களையும் உபதேசம் செய்து வந்தார். தமது உபதேசங்களையெல்லாம் சுருக்கமாகத் திரட்டி ஒரு நூலாகச் செய்து தரவேண்டுமென்று வள்ளுவரை சீஷர்கள் வேண்டிக்கொண்டார்கள்.

அவ்வாறே திருவள்ளுவரும் திருக்குறள் என்னும் நீதி நூலை இயற்றினார். அந்நாளில் மதுரையில் சங்கம் என்னும் புலவர் கூட்டம் இருந்தது. இப்புலவர் கூட்டத்தினரைச் சங்கத்தார் என்று கூறுவது உண்டு. அந்நாளில், சங்கத்தார்கள் ஒப்புக்கொண்ட நூல்களுக்கே விசேஷ மதிப்பு உண்டு. எனவே, திருக்குறளையும் சங்கத்தார்கள் ஒப்புக்கொள்ள வேண்டுமென்று ஏலேல சிங்கன் முதலான சீஷர்கள் விரும்பினார்கள்.

திருவள்ளுவர் தமது அருமைக் கையால் எழுத்தாணி பிடித்து, ஏடுகளில் தாம் இயற்றிய திருக்குறளை அழகாக எழுதிவைத்

தார். ஒவ்வொரு குறளும் ஓர் இரத்தின மாக இருந்தது.

இந்நூல் முழுமையும் தங்க ஏடுகளில் நவரத்தின எழுத்துக்களால் அமைக்கத் தக்க பெருமை வாய்ந்ததென்று அறிஞர் கள் கருதினர்கள்.

திருவள்ளுவர் தாம் எழுதிய பிரதிகளை எடுத்துக்கொண்டு மதுரைக்குப் புறப்பட் டார். வழியில் மழை வந்துவிட்டதால், அவர் ஓர் ஆலமரத்தடியில் ஒதுங்கியிருந் தார். அச்சமயம் அவ்வழியே வந்த ஔவையாரும் மழைக்காக ஒரு புளிய மரத் தடியில் ஒதுங்கி நின்றார். அப்புளிய மரம் திருவள்ளுவர் ஒதுங்கியிருந்த ஆலமரத் திற்கு எதிரேயிருந்தது,

திருவள்ளுவர் திருக்குறளின் பிரதி களை ஒரு சுமையாகச் சேர்த்துக்கட்டி, அச் சுமையைத் தமது தலையில் வைத்துக்கொண் டிருந்தார். அந்நிலையில் ஔவையாரும் திருவள்ளுவரும் ஒருவரோடொருவர் சம் பாஷிக்கத் தொடங்கினர். அச் சம்பாஷணை யின் மூலமாக ஔவையார் தமது சகோதரி என்பதைத் திருவள்ளுவர் அறிந்துகொண் டார். ஔவையாரும் அங்ஙனமே திருவள்ளு வர் தமது சகோதரர் என்பதைத் தெரிந்து கொண்டார்.

பிறகு ஔவையார் தமது அருமைச் சகோதரரை நோக்கி, சுமையில் இருப்பது என்ன என்று கேட்டனர். அச் சுமையில் தான் இயற்றிய திருக்குறள் என்னும் நூலின் பிரதிகள் இருக்கின்ற வென்று திருவள்ளுவர் மறுமொழி சொன்னார்.

திருக்குறளின் விஷயம் எப்படிப்பட்டது என்று ஔவையார் கேட்டார். திருவள்ளுவர் தமது நூலில் அடங்கிய விஷயத்தை விவரமாக சொன்னார். உடனே ஔவையார் அவ்விஷயத்தை ஒரே பாட்டில் அடக்கிப் பாடினார். அவர் பாடிய செய்யுள் வருமாறு :—

ஈதல் அறம், தீவினைவிட், டீட்டல் பொருள், எஞ்ஞா
காதல், இருவர், கருத்தொன்ற—ஆதரவு [ன்றும்
பட்டதே யின்பம் பரனை நினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு.

இதற்குள் மழை நின்றது. வானம் தெளிவு பெற்றது. திருவள்ளுவர் தமது நூலை மதுரையிலுள்ள சங்கத்தார் பார்வையிடும் பொருட்டு, எடுத்துச் செல்வதாகக் கூறினார்.

அப்பொழுது ஔவையார், 'சங்கப்புலவர்கள் பெரும் புலவர்கள் ; ஆனல் கர்வம் கொண்டவர்கள்' என்று சொன்னார்.

அப்பால் திருவள்ளுவரும் ஔவையாரும் மதுரையை நோக்கிச் சென்றார்கள். மதுரையை அடைந்தபின், அவர்கள் சங்கப் புலவர்களைப் போய் பார்த்தார்கள். அப்புலவர்கள் பொற்றாமரைத் தடாகத்தில் மிதந்துகொண்டிருந்த சங்கப் பலகையில் இருந்தார்கள்.

சங்கப் புலவர்கள் திருவள்ளுவரையாவது திருக்குறளையாவது கவனிக்கவேயில்லை. தமது நீதி நூலை அலட்சியம் செய்த புலவர்களுக்குப் புத்தி புகட்ட வேண்டுமென்று திருவள்ளுவர் நினைத்தார். உடனே அவர் சங்கப் பலகையின் மீது தமது நூலை வைத்தார்.

என்ன ஆச்சரியம்! சங்கப்புலவர்களைத் தாங்கிக்கொண்டு விரிந்திருந்த அப்பலகை அப்பொழுது குறுக ஆரம்பித்தது. அது வரவரக் குறுகி வீண் கருவம் கொண்ட அப்புலவர்களை யெல்லாம்கீழே தள்ளிவிட்டது. கடைசியாக அது குறுகிக் குறுகித் திருக்குறளுக்கு மாத்திரம் இடம் கொடுத்து மிதந்து கொண்டிருந்தது. அப்பொழுது தான் சங்கத்தார் திருக்குறளின் பெருமையை உணர்ந்து கொண்டார்கள்.

பிறகு அவர்கள் திருக்குறளைப் படித்துப் பார்த்தார்கள். திரும்பத் திரும்ப அதை படிக்கவேண்டும் என்னும் ஆசை அவர்களுக்கு அதிகரித்தது. முடிவில் அவர்கள் திருக்குறளையும் அதன் ஆசிரியரான திருவள்ளுவரையும் பலவிதமாய்ப் புகழ்ந்து பாடினார்கள்.

---

## 7. திருவள்ளுவர் வாசவனுக்கு உபதேசித்தது

வாசவன் என்னும் வியாபாரி, பல வருஷம் வியாபாரம் செய்து, பெரும் பொருள் சேர்த்திருந்தான். ஒரு நாள் இரவிலே, திருடர்கள் கூட்டமாக வந்து, அவன் வீட்டைக் கொள்ளை யிட்டார்கள். இதனால் வியாபாரி ஏழையானான். தான் பாடுபட்டுத் தேடிய பணம் போய் விட்டதே யென்று அவன் புலம்பினான்.

அவ்வியாபாரிக்கு அவனுடைய நண்பர் பலரும் ஆறுதல் கூற முயன்றனர். சிலர், செல்வம் நிலைப்பதில்லை யென்று வேதாந்தம் பேசினார். 'செல்வோம்! செல்வோம்!' என்று சொல்லிக் கொண்டே செல்வம் செல்கிறது என்று சிலர் விகடமாகப் பேசினார். வேறு சிலர் அவனுக்கு அதிர்ஷ்டம் இல்லை யென்று சொன்னார்

கள். இன்னும் சிலர் அவனைக் காணாத இடங்களில் இகழ்ந்து பேசினார்கள். சோம்பேறிகளான சில சந்யாசிகள், 'ஆசையை விட்டொழித்தல் வேண்டும்' என்று அவனுக்கு உபதேசம் செய்தார்கள். 'எல்லாம் விதிவசம்' என்று வேறு சில சந்யாசிகள் உபதேசித்தார்கள். ஆனால் வியாபாரியின் மனம் ஒரு சிறிதும் ஆறுதல் அடையவில்லை. அவன் பல நூல்களையும் படித்துப் பார்த்தான். அப்பொழுதும் ஆறுதல் ஏற்படவில்லை.

இப்படி இருக்கையில், வாசவன் ஒரு நாள் திருவள்ளுவரையும் திருக்குறளையும் குறித்துக் கேள்விப்பட்டான். உடனே அவன் திருக்குறளைப் படித்தால் ஒரு வேளை ஆறுதல் அடையலாமோ என்று யோசித்தான். ஆனால் நூலைப் படிப்பதற்கு முன், ஆசிரியரான திருவள்ளுவர் மூலமாகவே, தனக்கு வேண்டிய விஷயத்தை அறிந்து கொள்ள விரும்பினான்.

பிறகு அவன் மயிலாப்பூர் சென்று திருவள்ளுவரிடம் தன் கருத்தைத் தெரிவித்தான். அப்பொழுது அவர் அவனுக்குப் பின்வருமாறு உபதேசம் செய்தார்.

" வியாபாரியே ! பாடுபட்டுத் தேடிய பொருளை நீ நல்லவழியில்-அதாவது, தர்ம

வழியில் - செலவு செய்திருத்தல் வேண்டும். நீ அவ்வாறு செய்யாமல், பைகளில் கட்டிப் பெட்டிகளில் வைத்திருந்தாய். அவ்வாறு காத்திருந்து, கடைசியாக அத்திரவியங்களை யெல்லாம் திருடர் கையில் நீயே ஒப்பித்தாய். வியாபாரியே ! நீ இழந்த செல்வத்தை மீண்டும் முயற்சியால் பெற்றுக் கொள்ளலாம். இனியாவது நீ பொருள் வந்தவுடனே தருமத்தைத் தேடுவாயாக. பொருளைத் திருடிய திருடர்களால் தருமத்தைத் திருடுவது இயலாத காரியம். திருடுவது இனிதுபோலத் தோன்றினும், முடிவில் துன்பத்தையே தரும். இவ்விஷயங்களை யெல்லாம் நீ உன் அறிவைக் கொண்டு சோதித்துப் பார்த்தல்வேண்டும்."

இவ்வுபதேசம் வியாபாரிக்கு அமிர்தமாக இருந்தது. பிறகு அவன் திருக்குறளைக் கற்றான். அந்நூலில் சொல்லியபடி வாழ முயன்றான். அவன் மறுபடியும் வியாபாரம் செய்தான்; பொருளைக் குவித்தான்; தருமம் செய்தான். திருக்குறள் அவனுக்கு ஆறுதல் அளித்தது.

## 8. ஏலேல சிங்கனும் பண்டிதர்களும்

திருவள்ளுவர் மாசி மாதம் உத்தர நாளில் இவ்வுலகைவிட்டு, மோட்சம் அடைந்தார். அத்தினத்தைத் தமிழர்கள் திருவள்ளுவரின் குரு பூஜைத் தினமாகக் கொண்டாடுகிறார்கள். பெரியோர்கள் முத்தி பெற்றதினங்களை இவ்வாறு கொண்டாடுவது வழக்கம்.

சைவர்கள் திருவள்ளுவரைச் 'சைவர்' என்று கூறுகிறார்கள். அவர்கள் இவரைத் 'திருவள்ளுவ நாயனார்' என்று அழைக்கிறார்கள். ஜைனர்கள் திருவள்ளுவரை 'ஜைனர்' என்றே துணிகிறார்கள். அவர்கள் 'குண்ட குண்டர்' என்னும் பெயரைத் திருவள்ளுவருக்குச் சூட்டியிருக்கிறார்கள். இவ்வாறே பல வேறுமதத்தைச் சேர்ந்தவர்களும் திருவள்ளுவர் தங்கள் மதத்திலே பிறந்தவரென்றும் தங்கள் மதத்தைச் சேர்ந்தவரென்றும் வழக்காடுகிறார்கள். சகல மதத்தைச் சேர்ந்தவர்களும், ஒரு மதத்தையும் சேராதவர்களும், திருவள்ளுவர் பாடியருளிய திருக்குறளைப் போற்றுகிறார்கள்.

தமிழர்கள் திருக்குறளைத் தமிழ்வேதம் என்று சொல்லுகிறார்கள். உண்மையில், திருக்குறள் தமிழ்மக்களின் பொதுவான

வேதம். இந்நூலைச் சைவர்களும் போற்று கிறார்கள்; வைஷ்ணவர்களும் போற்றுகி றார்கள்; ஜைனர்களும் போற்றுகிறார்கள். மகமதியர்களும் இந்நூலை மதிக்கிறார்கள். கிறிஸ்தவர்களும் இந்நூலை எடுத்து ஆளு கிறார்கள். திருக்குறள் சகல ஜாதிகளுக்கும் சகலமதங்களுக்கும் பொதுவான சன்மார்க் கத்தை வெளியிடும் சமரச நூலாகும்.

இவ்வுண்மையை அறியாத பண்டிதர் பலர், திருவள்ளுவர் காலம் சென்ற பின் ஒரு நாள், ‘எங்கள் வேதம் உயர்ந்தது! எங்கள் சாஸ்திரம் சிறந்தது!’ என்று விவ காரம் செய்து கொண்டிருந்தனர். சம்ஸ் கிருத வித்துவான்களான சில சாஸ்திரிகள் சம்ஸ்கிருதத்திலுள்ள வேதங்களும் சாஸ் திரங்களும் திருக்குறளைக் காட்டிலும் சிறந் தன என்று சொன்னார்கள். ‘திருக்குறள் நீதி நூலேயாகும்; ஞானிகளுக்கு வேண்டி யது வேதாந்தமே’ என்று வேதாந்திகள் வாதம் செய்தார்கள். ‘திருக்குறள் ஒழுக்கத் தைக் காட்டுகிறது; உலக நடையை விளக்கு கிறது. ஆனால் பக்திமான்களுக்கு அவசிய மானவை பக்தி நூல்களே’ என்று பக்தர் கள் பிடிவாதமாகப் பேசினார்கள். பக்தர்க ளில், சைவர்களோ ‘எங்கள் தோத்திர நூல்களான தேவாரங்கள் சிறந்தன; திரு

வாசகம் சிறந்தது' என்று பேசினார்கள். 'தோத்திர நூல்களில் திருவாய்மொழி தான் மேலானது' என்று வைஷ்ணவர்கள் துணிந்தார்கள்.

இப்பண்டிதர்களின் விவகாரங்களை யெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த ஏலேல சிங்கன், அவர்கள் 'படித்த மூடர்கள்' என்று நினைத்தான். அவன் அவர்களிடம் இரக்கம் கொண்டான். அவர்களுக்குப் புத்தி கற்பிக்க விரும்பினான். இந்நோக்கத்தோடு, அவன் அவர்களைத் தன் மாளிகைக்கு விருந்தினராக வரும்படி அழைத்தான். அவர்களும் இணங்கினார்கள்.

ஏலேல சிங்கன் விருந்தினர்களை உபசரித்தான். அவர்கள் விருந்து சாப்பிட உட்கார்ந்தார்கள். சமையல் செய்தவன், வர்த்தக ராஜாவின் கட்டளைப்படி, ஒரே பாயசத்தைத் தங்கக் கிண்ணம் வெள்ளிக் கிண்ணம் வெண்கலக் கிண்ணம் முதலிய பலவேறு கிண்ணங்களில் வார்த்தான். பிறகு அவன் அப்படிப்பட்ட கிண்ணங்களை ஒவ்வொரு கலத்திலும் கொணர்ந்து வைத்தான்.

அவை பலவகையான பாயசங்கள் என்று பண்டிதர்கள் நினைத்தார்கள். ருசி பார்த்த பின் அக் கிண்ணங்களில் உள்ளது

ஒரே விதமான பாயசந்தான் என்று கண்டு பிடித்தார்கள்.

பிறகு அவர்கள் ஏலேல சிங்கனை நோக்கி, 'செட்டியாரே! ஒரே பாயசத்தைப் பலவிதமான பாத்திரங்களில் வைத்திருப்பதற்கு என்ன காரணம்?' என்று கேட்டார்கள். அப்பொழுது வர்த்தகராஜா சொன்னான் :—

"பண்டிதர்களே! ஒரே பாயசம் பலவேறு பாத்திரங்களில் இருக்கிறது. அப்படியே நாம் ஒரே விதமான பொருளைப் பலவிதமான நூல்களில் பார்க்கலாம் அல்லவா? சம்ஸ்கிருத பாஷையில் வேதசாஸ்திரங்கள் இருக்கின்றன. தமிழ் மொழியில் தேவாரம் திருவாசகம் திருவாய்மொழி திருக்குறள் முதலான நூல்கள் இருக்கின்றன. இவற்றுள் திருக்குறள் நீதிநூல்; தேவாரம் முதலியன தோத்திர நூல்கள். தோத்திர நூல்களிலும், தேவாரமும் திருவாசகமும் சைவநூல்கள்; திருவாய்மொழி வைஷ்ணவ நூல். இவை பலவேறு நூல்களாகக் காணப்படுகின்றன. எனினும் இவைகளெல்லாம் ஆஸ்திக புத்தியை வளர்ப்பதில் ஒன்றுபட்டிருக்கின்றன. பாத்திரங்கள் பல; எனினும் பாயசம் ஒன்றே. அவ்வாறே நூல்கள் பலவாயிருக்கலாம்;

எனினும் முடிவான பொருள் ஒன்றாயிருக்கலாம் அல்லவா ? இவ்வுண்மையை அறியாமல், 'அது உயர்ந்தது ; இது சிறந்தது' என்று பிடிவாதம் செய்வது சரியன்று.''

இவ்வாறு ஏலேலசிங்கன் கூறியதைக் கேட்டு, அப்பண்டிதர்கள் சந்தேகம் தெளிந்து, திருக்குறளின் பெருமையை உள்ளவாறு உணர்ந்து கொண்டார்கள்.

---

## 9. திருக்குறள் - வித்துவான்— பிறப்பினால் பெருமை இல்லை.

கங்காதர சாஸ்திரியாரின் மகனை சங்கரன் மூடசிகாமணியாயிருந்தான். எனினும் சாஸ்திரி மகன் சாஸ்திரியாகத்தான் இருக்கவேண்டுமென்று நம்பினான். இவ்விதமாக நம்பியதால், அவன் சங்கரசாஸ்திரி என்று தானே தன்னை அழைத்துக் கொண்டான்.

சங்கர சாஸ்திரி கல்வி யறிவில்லாதவன். அவனுக்கு உலகமும் நன்றாகத் தெரியாது. 'பிறப்பினால் பிராமணனாகிவிட்டோம்' என்று கர்வம்கொண்டிருந்த சங்கர சாஸ்திரி யாகம் செய்ய விரும்பினான். "ஆட்டை வதைத்து யாகம் செய்வதே

போதுமானது; யோக்கியதை வேண்டாம்; படிப்பு வேண்டாம்; நாடறிந்த பிராமணனுக வாழலாம்' எனச் சங்கர சாஸ்திரி நினைத்தான்.

இப்படிப்பட்ட நினைப்போடு, அவன் ஒரு வியாபாரியிடம் சென்று யாகம் செய்வதற்கு ஆடு வேண்டுமென்று யாசித்தான். வியாபாரி மூடபக்தனுயிருந்ததால், சங்கர சாஸ்திரியின் பிராமண வேஷத்தைக் கண்டு மயங்கினுன். உடனே அவன் பிராமணனுக்குக் கொழுத்த ஆடு ஒன்று கொடுத்தான்.

சாஸ்திரி ஆட்டைத் தோளின் மேல் போட்டுக்கொண்டு வீடு நோக்கி நடந்து வந்தான். இதை மூன்று துஷ்டர்கள் தூரத்திலிருந்து கவனித்தார்கள். 'இப் பார்ப்பான் மூடன்; இவனை வஞ்சித்து நாம் இந்த ஆட்டைக் கொண்டுபோக வேண்டும்' என்று அவர்கள் தீர்மானம் செய்தார்கள்.

முதல் முதல் துஷ்டர்களில் ஒருவன் பிராமணன் முன் வந்து, 'சாஸ்திரிகளே! நீங்கள் பரமவைதிகராயிருந்தும் இவ்வளவு இழிவான காரியத்தைச் செய்யலாமா?' என்று சிரித்தான். சாஸ்திரியோ, 'சண்டாளா! நான் யாகப் பசுவாகிய ஆட்டைக் கொண்டுபோகிறேன். இது இழிவானதா?'

என்று கோபித்தான். உடனே துஷ்டன், 'சாமீ! அடியேன் மீது கோபம் வேண்டாம். உங்கள் இஷ்டம்போல் செய்யுங்கள்' என்று சொல்லிப் போனான்.

பிராமணன் சிறிது தூரம் சென்றபின், வேறொரு துஷ்டன் தோன்றினான். 'ஓ ஐயரே! என்ன அநியாயம்? நாய் கழுதை முதலான பிராணிகளைப் பிராமணர்கள் தீண்டுவது பாவமல்லவா?' என்று கவலையோடு சொன்னான். அப்பொழுது சங்கர சாஸ்திரி 'குருடா' இது யாகப்பசு அல்லவா? இழிவான பிராணியென்று நீ இதைச் சொல்வதற்குக் காரணம் என்ன?' என்று வருத்தத்தோடு கேட்டான். அத்துஷ்டனும் 'சாமீ! இஷ்டம்போல் செய்யுங்கள். வருத்தம் வேண்டாம்' என்று பரிகாசம் செய்து கொண்டே ஓட்டம் பிடித்தான்.

பிராமணன் இன்னும் சிறிது தூரம் சென்றான். செல்லும்போது 'இது ஒரு வேளை யாகத்திற்கு ஏற்ற ஆடாக அமையாதோ?' என்று அவன் சந்தேகித்தான். அந்நிலையில் மூன்றாம் துஷ்டன் எதிரே வந்தான். அவன் பிராமணனைப் பார்த்து, 'சிவ சிவா! கழுதையைத் தோள்மேல் தூக்கிக்கொண்டு செல்லும் ஐயருக்கு ஐயோ!

ஐயோ!' என்று அலறிக் கொண்டு விலகி ஓடினான்.

பிராமணன் மூடனாயிருந்ததால் ஆட்டைக் குறித்து அநேக விதமாகச் சந்தேகித்தான். 'பலர் இத்த ஆட்டைக் குறித்து இழிவாகப் பேசினார்கள். அவர்கள் கண்களுக்கு இது கழுதையாகக் காண்கிறது; ஆனால் என் கண்களுக்கோ ஆடாகவே தெரிகிறது. இது ஒருவேளை பேயோ, பூதமோ?' என்று அவன் தனக்குள்தானே சொல்லிக் கொண்டான்.

பிறகு அவன் ஆட்டைக் கீழே விட்டு, விட்டு ஆற்றுக்குப்போய் நீராடி வீடு சென்றான். துஷ்டர்களோ ஆட்டைக் கொன்று தின்றார்கள்.

இதை அறிந்த பிராமணன் அடுத்த வீட்டில் இருந்த தமிழ் வித்வானிடம் நான் மூடத் தனத்தால் மோசம் போனேன் என்று சொன்னான். அவன் அறிவாளி; திருக்குறள் படித்தவன். 'ஆயிரம் யாகம் செய்வதைக் காட்டிலும் ஒரு பிராணியைக் கொல்லாமலிருப்பதே சிறந்தது. மேலும் பிறப்பையும் யாகத்தையும் பார்க்கிலும் யோக்கியதை அல்லது ஒழுக்கமும் அறிவுமே மேலானவை' என்று தமிழ் வேத

மாகிய திருக்குறள் போதிப்பதை அப் பிராமணனுக்கு வித்துவான் எடுத்துக்கூறினன். அவ்வுபதேசத்தினல் அப் பிராமணன் நல்லறிவை அடைந்தான்.

(முற்றும்.)

Kesari Printing Works, Madras.